# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாதஇதழ்

மலர் - 16 நவம்பர்




வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா
☎04257-230030, 230382. Cell : 98427 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

**கிறிஸ்தவ பக்தி விருத்திப் பாடல்கள்** (320 பாடல்கள்) புத்தகம், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகான பிளாஸ்டிக் கவருடன் உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பாடல் புத்தகத்தின் அடக்கவிலை **ரூ. 45/-** ஆனால், நாங்கள் உங்களுக்கு குறைந்த விலையில் அதை விநியோகிக்க முடிவு செய்துள்ளோம்.

பாடல் புத்தகத்தின் விலை **ரூ. 25/-** ஆனால் அதை தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை **ரூ. 35/-.** உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு : M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.


# ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | எக்லீசியா வேதாகமக் கல்லூரி மாணவர் சேர்க்கை | 8 |
| 3. | பாவமான்னிப்புக்கென்று ஞானஸ்நானம் | 9 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | II தீமோத்தேயு ஒரு கண்ணோட்டம் | 20 |
| 7. | சிறுவர் பகுதி | 21 |
| 8. | தேவனுடைய பரிசுத்த .... | 23 |
| 9. | நீதியான நியாயத்தீர்ப்பு | 27 |
| 10. | கர்த்தருடைய வேதம் | 30 |

THIRUMARAI AASAAN
PUBLISHED BY CHURCH OF CHRIST
Editor
S. Rajanayagam
Honorary Editor
J.C. Choate
Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India
*Pleading for the restoration of pure New Testament Christianity*
Vol.16 November - 2003 Issue-11

ஆசிரியர் உரை

# "பூரண பலனைப் பெறுவோம்"

ஒட்டுமொத்த வேதாகமத்திலும் ஓர் அதிகாரம் கொண்ட அல்லது அதிகாரமே இல்லாத புத்தகங்கள் ஐந்து உண்டு. அவைகளில் ஒன்று (ஒபதியா) பழைய ஏற்பாட்டிலும், மீதி நான்கு (பிலேமோன், II, III யோவான், யூதா) புதிய ஏற்பாட்டிலும் இடம் பெற்றுள்ளது. இந்த ஓர் அதிகாரம் கொண்ட புத்தகங்கள், வேதாகமத்தின் பிறபுத்தகங்கள் பயன்படுத்தப்படும் அளவுக்கு பயன்படுத்தப்படுவதில்லையென்பது வெளிப்படையான ஒன்று. ஒருவேளை, புதிய ஏற்பாட்டில் உள்ள நான்கில், பிலேமோன், I, III யோவான் போன்றவைகளாகிலும் பரவாயில்லை. அவ்வப்பொழுது, பிரசங்கிகளாலும், வேதாகம எழுத்தாளர்களாலும் மேற்கோள் காட்டப்படுகிறது. ஆனால், இந்த இரண்டு யோவான் புத்தகமோ, மிக, மிகக் குறைவான சந்தர்ப்பங்களில் மாத்திரம் எடுத்து கையாளப்படுகிறது. அதுவும், பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டும். ஆம் ஒரு சகோதரனை சபையை விட்டு விலக்குவதற்கும், ஒருவனை ஐக்கியத்திலிருந்து கழற்றிவிடுவதற்கும் இதிலுள்ள 10,11-ம் வசனங்கள் பயன்படுத்தப்படும்.

இத்தனைக்கும் இது பிரபல அப்போஸ்தலனாகிய யோவானாலே, ஆவியானவரின் துணை கொண்டு எழுதப்பட்ட ஒன்று. இதே யோவானின் நற்செய்தி நூலிலும், I, III யோவான் நிருபங்களும் பெற்றிருக்கும் பொதுவான அங்கீகாரம் இதற்கு இல்லை. இது கண்டிப்பாக, வேத வசனங்களைக் கொடுத்த தேவனுடைய தவறோ அல்லது அவைகளை ஏவிய ஆவியானவருடைய தவறோ இல்லை.

வேதவாக்கியங்கள் அனைத்தும் நம்முடைய பிரயோஜனத்திற்காகவே அருளப்பட்டிருக்கிறது. (II தீமோ 3 : 16, 17). எல்லா நாட்களிலும் நமக்கு அவசியமான செய்திகள் போதனைகள் அவைகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அநந்த ஞானமுள்ள தேவன் பிரயோஜனமற்ற எதையும் நமக்கு வெளிப்படுத்தவில்லை (அப்.20:22). ஆகவே, கண்டிப்பாகத் தவறு நம்முடையது தான். ஓர் அதிகாரம் கொண்ட, அதிலும் குறிப்பாக வெறும் பதிமூன்று வசனங்களே கொண்ட இந்த இரண்டு யோவான் புத்தகமும் நமக்குத் தேவையான சில பாடங்களை கற்றுத் தருகிறதாகவே உள்ளதென்பதை நாம் உணர்ந்தவர்களாய் இதனுள்ளே சென்று பார்ப்போம்.

சின்னஞ்சிறிய இந்நூலின் ஆசிரியரான அப்போஸ்தலன் யோவான், அன்பின் சீஷன் என்றும், அன்பின் அப்போஸ்தலன் என்றும் வெகுவாக அறியப்பட்டிருக்கிறான். ஆனால், இதைவிடச் சிறப்பான அளவில் இவன் அறியப்படுவதற்கும் போதுமான ஆதாரம் இருக்கிறதென்பது அநேகர் அறியாத ஒன்றாக இருக்கிறது. ஆம், இந்த அன்பின் அப்போஸ்தலனை **சத்திய அப்போஸ்தலன்** என்றும் **நித்திய அப்போஸ்தலன்** என்றும் நாம் பெருமையோடு பெயர் சூட்டி அழைக்க முடியும். ஆம், வேறு எந்த ஒரு அப்போஸ்தலனைக் காட்டிலும், "**சத்தியம்**" என்ற வார்த்தையை குறைந்தது 42 முறை இவர் பயன்படுத்தியுள்ளார். இன்றைக்கு கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவ மதத் தலைவர்களுக்கும் முக்கியமற்றதாக இருக்கும் "சத்தியமாகிய வேத வசனம்" அவருக்கு எவ்வளவு முக்கியமாக இருந்துள்ளது என்று பாருங்கள். இன்னும் ஏனைய வேதாகம ஆசிரியர்களைக் காட்டிலும் குறிப்பாக புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களைக் காட்டிலும், "**நிலைத்திருங்கள்**" என்ற வார்த்தையை சற்றேறக் குறைய 28 முறை பயன்படுத்தி, "நித்தியத்தை" நினைவுப்படுத்திக் கொண்டேயிருப்பார். இப்படி இவர் எழுதினதற்குப் பலமான காரணமும் இருந்தது. எப்படியெனில், ஏனைய புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் காலத்தில் கள்ளத் தீர்க்கதரிசிகள் **பின்னாளில் தோன்றுவார்கள்** என்ற நிலையும், கள்ள உபதேசம் விரைவில் வந்து சேரும் என்ற நிலையும் இருந்தது. (அப் 20 : 29, 30) ஆனால் **இவருடைய காலத்திலோ,** அந்த அபாயம் வந்து சேர்ந்து விட்டது. ( I யோவா 4 : 1). ஆகவேதான், இந்த அப்போஸ்தலன், "சத்தியம்" "நிலைத்திருங்கள்" என்ற வார்த்தைகளை, ஆவியானவரின் துணையோடு அதிகம் எடுத்துச் சொல்லி, வலியுறுத்துகிறார்.

அநேகரால், அதிகம் பயன்படுத்தப்படாமல் கொஞ்சம் தள்ளி வைக்கப்பட்டிருக்கும் நம்முடைய II யோவான் நிருபத்தை நாம் கிட்டப் போய்ப் பார்த்தால், கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியமான காரியங்கள்

இரத்தினச் சுருக்கமாக சொல்லப்பட்டிருக் கிறதைக் கண்டுகளிக்கலாம். ஆம், சத்தியத்திலே நடக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் (4-6), கள்ளப் போதகர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அவசியம் குறித்தும், ஒழுங்கற்றுத் திரிகின்ற, உபதேசத்தில் நிலைத்திராத கள்ளச் சகோதரர்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது (10,11) என்பது குறித்தும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

இம்மாதத்திற்கான நம்முடைய தலைப்பு, இச்சிறிய நூலின், எச்சரிக்கைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. **"உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (வ 8) என்பதே அது. ஆங்கில வேதாகமம் "எச்சரிக்கையாயிருங்கள்"** என்பதற்குப் பதிலாக **"உங்களையே நோக்கிப் பாருங்கள்" என்கிறது. அதாவது, "உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு உங்களையே நோக்கிப் பாருங்கள்"** என்று கூறுகிறது. இந்த வசனத்தை கவனித்துப் பார்த்தால், முதலில் ஒரு செய்கை அல்லது கிரியை அல்லது செயல் உண்டென்றும், அந்த செய்கைக்கு ஒரு பலனும் உண்டென்றும், குறிப்பிட்ட செய்கையின் மூலமாகப் பெற்றுக் கொண்ட அந்த பலனை, இழந்து போக வாய்ப்புண்டென்றும், அப்படி இழந்து போகாமல், அந்த செய்கைக்கான பலனை பூரணமாக அடைய வேண்டுமானால், நம்மை நாம் நோக்கிப் பார்த்துக் கொண்டு பரிசோதித்துப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்றும் சொல்கிறது. பூரண பலனுக்கான ஒரே வழி இதுதான் என்று இந்த அப்போஸ்தலன் அறுதியிட்டுக் கூறுவதால் இது குறித்து நாம் இன்னும் கொஞ்சம் விபரமாகப் பார்த்துப் பயனடைவோம்.

## I. நம்முடைய கிரியை என்ன? பலன் என்ன?

இவ்வசனத்தின் முதல் பகுதி இந்த நிருபம் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட ஒன்று என்பதை உணர்த்துகிறது. எப்படியெனில், கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக (ஏசா 62 : 2), அந்தியோகியா பட்டணத்தில் முதன் முதலாக சீடர்களுக்கு கொடுக்கப்பட்டது. இந்த சீடர்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்கள். அதாவது, விசுவாசித்து (மாற் 16 : 16), மனந்திரும்பி (அப் 2 : 38), அறிக்கை பண்ணி (ரோம 10 : 9, 10) பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள் (அப் 22 : 16) இதையே சுருக்கமாகச் சொல்வதானால், இவர்கள் சத்தியத்தின்படி இரட்சிக்கப்பட்டவர்கள்.

இப்படி இரட்சிக்கப்படுவதற்காக கிரியைகள் நடப்பிக்கப்பட்டிருக்கிற தென்று மேலுள்ள வசனங்கள் அழகாகச்

சொல்லுகிறது. எபே 2:10ம் வசனம், தேவ கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்று சொன்னாலும், யாக் 2 : 17-ம் வசனம், "கிரியையில்லாத விசுவாசம் செத்ததென்றே" கூறுகிறது. யாக்கோபு ஆசிரியர் இந்த அரிய உண்மையை அருமையாக விவரிக்கிறார். (யாக் 2:14-26) தன்னுடைய வாதத்தில், ஆபிரகாம் கிரியைகளினால் தான் நீதிமானாக்கப்பட்டான் என்று சொல்லி, விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட முயற்சி செய்தபடியால், அவனுடைய விசுவாசம் பூரணப்பட்டதென்று முடிக்கிறார் (வ 21, 22).

சரி, இரட்சிக்கப்படுவதற்கான கிரியையை நடப்பித்ததின் பலன் என்ன? கடந்த கால பாவங்கள் கழுவப்பட்டது. இரட்சிப்பு பெற்றோம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கமானோம். தேவனுடைய குடும்பத்திலே பிறந்தோம். தேவன் நமக்குத் தகப்பனானார். இயேசுவானவர் நம்முடைய மத்தியஸ்தரானார், நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். பரிசுத்த ஆவியின் வரம் கிடைத்தது. வாடாத ஜீவ கிரீடத்தைப் பற்றிய நம்பிக்கை இன்னும் நித்திய வாழ்வுக்கான வாக்குத்தத்தம் ஆகிய இவையனைத்தும் விசுவாசக் கிரியையினால்.

## II. பெற்ற பலனை இழந்து போக வாய்ப்புண்டு

இந்த வசனத்தின், இரண்டாம் பகுதி சொல்லுகிறது. "பலனை இழந்து போகாமல்" என்று அதாவது, விசுவாசக் கிரியைகளின் மூலமாகப் பெற்ற பலனை ஒருவன் இழந்து போக வாய்ப்புண்டு என்று.

தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஒன்றை இழந்து போக முடியுமா என்ற கேள்விக்கே இடமில்லை. சொல்லப்போனால் விழுந்து போதல் பரலோகத்திலேயே ஆரம்பமாகிவிட்டது (யூதா 6) ஆகவே, கண்டிப்பாக ஒருவன் தன் நிலையிலிருந்து இழந்து போக முடியும். வேதாகமம் முழுவதிலும் இதற்கு உதாரணங்கள் நிறைந்திருக்கிறது. விசுவாச வீரர்களின் பட்டியல் ஒன்று இருப்பது போல, விழுந்து போனவர்களுக்கென்று ஒரு பெரிய பட்டியல் இல்லை. ஆனால், நாம் எந்த சிரமுமில்லாமல் இதற்கு ஒரு பட்டியலைத் தயாரிக்க முடியும். சவுல் ராஜா (15:11), சாலமோன் ராஜா (I ராஜா 11:1-10), அமத்சியா (II நாளா 25:14-16) யூதாஸ்காரியோத்து (மத் 26 : 14-16) போன்றவர்கள் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இன்னும், புதிய ஏற்பாட்டின் கீழாக, அப்போஸ்தலன் பவுல், தன் விசுவாசக் குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு நிருபம் எழுதும் போது, சிலரை அடையாளப்படுத்துகிறார். இமநே, பிலேத்து (II தீமோ 2 : 17) மற்றும் தேமா (4:10) போன்றவர்கள். இழந்து போக வாய்ப்புண்டு என்பதால் தான்

இந்த "நித்திய அப்போஸ்தலன்" நிலைத்திருங்கள், நிலைத்திருங்கள் என்று அடித்து அடித்துக் கூறுகிறார். இதே காரணத்திற்காகத் தான் யூதா நிருபத்தின் ஆசிரியர், "ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடுங்கள்" என்கிறார் (யூதா 3)

## III. பூரண பலன்.

இந்த வசனத்தின் மூன்றாம் பகுதி, பூரண பலனைப் பற்றி பேசுகிறது. ஒரே வசனத்தின் முதல் பகுதி பலனைப் பற்றியும், அடுத்தப் பகுதி பூரண பலனைப் பற்றியும் பேசுகிறது.

பலன் என்பது என்ன? பூரண பலன் என்பது என்ன? இரட்சிப்பு பற்றி பேதுரு அப்போஸ்தலன் கூறும் போது, "விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பு" என்று கூறுகிறார். மறுபடியும், விசுவாசம் கிரியைகளுடன் சேர்ந்து முழுமையடைந்து ஆத்தும இரட்சிப்பு கிடைத்தது. நம்முடைய விசுவாசக் கிரியைகளின் பலன் ஆத்தும இரட்சிப்பு. ஆனால், இந்த சின்னஞ்சிறிய நூல் கூறும் "பூரண பலன்" என்பது, கிரியைகளின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பைக் காட்டிலும், மேலான ஒன்றாகவே தெரிகிறது.

அப்படியானால், பூரண பலன் என்பது எது? நம்முடைய இரட்சகர் இயேசுவானவர் சொன்னது போல், "முடிவு பரியந்தம் நிலைத்திருந்து ஆத்தும இரட்சிப்பைக் காத்துக் கொள்ளுவோமானால் (மத் 10 : 22) நித்தியத்திலே நமக்கு ஒரு பலன் காத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பலனே, பூரணப் பலன். பூரண பலன் என்று அப்போஸ்தலன் யோவான் இதைத்தான் குறிப்பிடுகிறார்.

தேவாதி தேவனும் (I ராஜா 8 : 30), நம்முடைய இரட்சகரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவும் (எபி 9 : 12, 24) பரிசுத்த ஆவியானவரும் (சங் 139 : 7,8) பரிசுத்த தேவ தூதர்களும் (மத் 18 : 10) வாசம் கொண்டிருக்கும் ஓர் இடம், இன்னும், பூமியில் தேவனுக்காக வாழ்ந்து மரித்த நீதிமான்கள் நித்திய காலத்திற்கும் வாழப்போகிற ஓர் இடம் பூரணமானது தானே.

இன்னும் கண்ணீரும், மரணமும், துக்கமும், அலறுதலும், வருத்தமும் இல்லாத ஓரிடத்தை பூரணமானதென்று சொல்லக் கூடாதா? கண்டிப்பாக அது பூரணமானது தான். இந்த பரலோகத்தின் அழகைக் குறித்து, அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது, "எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" ( I கொரி 2 : 9) என்று கூறுகிறார்.

இந்த பூரண பலனாகிய பரலோகத்தை தேவன் தம்முடைய உண்மைப் பிள்ளைகளுக்குத் தர ஆயத்தமுள்ளவராகவே இருக்கிறார். பூரண பலனாகிய பரலோகம் குறிப்பிட்டவர்களுக்கு மாத்திரமல்ல. அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லும் போது, "இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என்று கூறுகிறார். (II தீமோ 4 : 8) ஆம், பரலோகத்திலே கிடைக்கும் நீதியின் கிரீடம் பவுலுக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவரும் அதை பெற்றுக் கொள்ளமுடியும்.

## IV. எச்சரிக்கையாயிருங்கள் - உங்களையே நோக்கிப் பாருங்கள்

பொருள் செறிந்த இந்த வசனத்தின் இறுதிப் பகுதி சொல்லுகிறது, உங்களையே நோக்கிப் பாருங்கள் என்று. ஆம், விசுவாசக் கிரியைகளின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை இழந்து போகாமலிருந்து, பூரண பலனாகிய பரலோக பாக்கியம் பெற வேண்டுமானால், ஒருவன் செய்ய வேண்டிய காரியம், தன்னை நோக்கிப் பார்க்க வேண்டுமென்பது.

எப்பொழுதுமே பிறரை நோக்கிப் பார்ப்பதும், பிறர் குறை காண்பதும் சுலபம். ஆனால், நம்மை நாமே நோக்கிப் பார்ப்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. இது குறித்து நம்முடைய அருமை இரட்சகர், பிறர் கண்ணில் இருக்கும் துரும்பைப் பார்க்கும் நாம், நம்முடைய கண்ணில் இருக்கும் உத்திரத்தைப் பார்க்க மறந்து விடுவோம் என்று சரியாகச் சொல்லியுள்ளார் (மத் 7 : 3-5).

என்னுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசன் என்று பெயர் பெற்ற, புகழ்மிக்க ராஜாவாகிய தாவீது, ஒரு கட்டத்தில் தன்னைப் பார்க்க மறந்தான். தனக்கு உண்மை ஊழியனாக இருந்த உரியாவின் மனைவியைத் தனக்காக்கிக் கொள்ள, பத்துக் கட்டளைகளில் மூன்றை மீறிப் பாவம் செய்து, அதை உணராமல் இருந்த போது, தன்னை அவன் பார்க்கத் தவறிய போது, தேவன், நாத்தான் தீர்க்கனைக் கொண்டு, ஒரு உவமையின் மூலம் எடுத்துரைத்தார். அதைக் கவனமாய்க் கேட்ட தாவீது, நாத்தானைப் பார்த்து, "இந்த காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" என்று உரக்கச் சொன்னான். (II சாமு 12 : 5). அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி : நீயே அந்த மனுஷன் என்று கூறி, தாவீதை அதிர வைத்தான் (12 : 17). தன்னைப் பார்க்காமல் பிறனைப் பார்ப்பது எவ்வளவு சுலபம் என்று இச்சம்பவத்திலிருந்து மிக நன்றாகவே தெரிகிறது.

இன்னும், நம்முடைய ஆண்டவர், பேதுருவிடம், அவன் பட வேண்டிய பாடுகளையும், மரணத்தையும் முன்னறிவித்த போது, எப்போதும் அவசரம் காட்டும் பேதுரு, யோவானைச் சுட்டிக் காட்டி, "இவன் காரியம் என்ன?" என்றான். அதற்கு இயேசு : நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, **நீ என்னைப் பின்பற்றி வா**" என்றார். (யோவா 21 : 19-21) நம்முடைய ஆண்டவர் சொல்லுகின்ற காரியம், உன்னை நீ பார். பிறனைப் பார்க்காதே என்பதுதான். மேலும், அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது, "நீங்கள் விசுவாசமுள்ளவர்க ளோவென்று **உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்** என்றே கூறுகிறார் (II கொரி 13 : 5).

அருமையானவர்களே, பூரண, பலனைப் பெறுவதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்களில் ஒன்று நம்மை நாமே பார்ப்பதாகும். நம்மை நாம் எப்படிப் பார்ப்பது? அப்போஸ்தலனாகிய யாக்கோபு, திருவசனத்தை கண்ணாடிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். "என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும், அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத் தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான் என்று (யாக் 1 : 23, 24).

ஆகையால் தேவனைப் பிரியப்படுத்தவும், அந்த மகா நாளில், தேவனால் கொடுக்கப்படும் பூரண பலனைப் பெற்றுக் கொள்ளவும் விரும்பும் ஒருவன், வேத வசனமாகிய கண்ணாடியில் தன்னைத்தானே பார்த்து, தன் குறைகளைக் கண்டு அதைத் திருத்திக் கொள்ளுகிறவனாயிருக்க வேண்டும். வேத வசனங்கள் தன்னுடைய ஆன்மீக வாழ்க்கைக்கு என்ன சொல்லுகிறதென்று அடிக்கடி சோதித்துப் பார்க்கிறவனாயிருக்க வேண்டும்.

அப்படி நாம் பார்க்கும் போது வசனங்களுக்கு மாறான செயல்பாடு தென்படுமானால், அதை அல்லது அவைகளை எப்பாடுபட்டாகிலும், திருத்திக் கொள்ள முழு முயற்சி எடுக்கிறவனாயிருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தாமதமோ, தயக்கமோ காட்டக் கூடாது. "இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்" என்றே வசனம் கூறுகிறது (II கொரி 6 : 2).

ஆகவே, எச்சரிக்கையாயிருந்து, பிறரை அல்ல, நம்மையே நோக்கிப் பார்த்து, நம்முடைய செய்கைகளின் பலனை இழந்து போகாமல், பூரண பலனைப் பெறுவோம். ஆமென்.

**செ. ராஜநாயகம்**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

***P.O. Box - 27, Kangayam - 638 701. India.***

**STUDENTS ADMISSION NOTIFICATION**

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **காலம்** | : | **3 வருடம்** (செமஸ்டர் முறை) |
| **Duration** | : | **3 Years (Semester System)** |
| **கல்வித் தகுதி** | : | **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு** |
| **Qualification** | : | **+2 Pass (or) Any Degree** |
| **பட்டம்** | : | **வேதயியலில் இளங்கலை பட்டம்** |
| **Degree** | : | **B.B.S. (Bachelor of Biblical Studies)** |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி,**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701. இந்தியா

✆ : (04257) 230030,

Cell : 98427 - 30382.

# பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம்

எல்லா காலத்திலும் விவாதத்திற்கு உட்பட்ட ஒரு தலைப்பாக ஞானஸ்நானம் இருக்கிறது. அப்படி இருப்பினும், அது வேதாகமம் சம்பந்தப்பட்டதாகவும், சுவிசேஷத்தின் கட்டளையாகவும் இருக்கிறது. சுவிசேஷத்தின் மற்ற கட்டளைகளைவிட இது முக்கியம் என்று சொல்ல முடியாது. ஆனால் அதே நேரத்தில் மற்ற கட்டளைகளை போலவே இதுவும் அவசியமானது. அந்த ஒரு கட்டளை மாத்திரம் நம்மை இரட்சிக்காது. ஆனால், மாறாக, ஒவ்வொருவரும் நாடுகிற இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள, சுவிசேஷத்தின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

இந்த பாடத்தில் நம்மால் முடிந்த வரை ஞானஸ்நானத்தைப் பற்றி படிக்கப் போகிறோம். முதலாவதாக, ஞானஸ்நானம் என்ற வார்த்தையின் பொருளை அறிந்து கொள்வோம். இது எளிதானதாக இருக்கிறது. இந்த வார்த்தை "பேப்டிசோ" (Baptizo) என்ற கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. இதற்கு முழுக்கு, ஒன்றை தண்ணீருக்குள் கொண்டு செல், ஒன்றை தண்ணீரைக் கொண்டு முழுகு, தண்ணீருக்குள் அடக்கம் பண்ணு என்று பொருள். வேதமும் இதற்கு துணை போகிறது, கவனியுங்கள், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர்.6;3,4). "ஞானஸ்நானத்தினாலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பி தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோ.2;12). தெளித்தல் மற்றும் ஊற்றுதல் பற்றி என்ன? இவைகள் மனிதனின் கற்பனைகளாக இருக்கிறது. முழுகுதலை மாற்ற வேண்டும் என்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று தான் இவை. தேவனுடைய வார்த்தைகளை மதிக்கிற யாரும் இவைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

அடுத்ததாக, வேதாகமத்தில் பல்வேறு ஞானஸ்நானத்தைப் பற்றி வாசிக்கிறோம். ஆனால், எபேசியர் 4;5ல் பவுல் எழுதும் போது, ஒரே

ஞானஸ்நானம் எது? நாம், அப்.8;26-39 வரை வாசிக்கையில், எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சித்தத்தைப் பற்றியும் போதித்த பின்பு மந்திரி ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ள ஆசைப்படுகிறான், வேதம் சொல்லுகிறது. "இவ்விதமாய், அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி : இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்கு பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடு விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது அவன், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்" (அப்.8;36-38). இப்பொழுது நாம் சில காரியங்களை கவனிப்போம்.

1. ஒரு மனிதன் கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதின் உச்சக்கட்டமாக ஞானஸ்நானம் இருக்கிறது.

2. அது ஒரு அடக்கமாக, தண்ணீரில் நிகழ்ந்த அடக்கமாக இருக்கிறது. அது நமக்கு தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஆகவே, இந்த காரியத்தில் யாருக்கும் சந்தேகம் வர முடியாது யாரும் நம்மை குழப்பவும் முடியாது. வசனம் சொல்லுகிறது இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் என்று, இன்னும் தெளிவாக பிலிப்பும், மந்திரியும் அப்படி இறங்கினார்கள் என்று சொல்லுகிறது. இன்னும் உறுதியாக சொல்லும் விதத்தில், ஞானஸ்நானம் எடுத்த பின்பு இருவரும் தண்ணீரிலிருந்து கரை ஏறினார்கள் என்று வசனம் தெளிவாக சொல்லுகிறது. இதற்கு எதிராக யாரால் வாதிட முடியும். தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் அப்படி செய்யமாட்டார்கள்.

யோவான் 3;3-5 வரையுள்ள வசனப் பகுதிகளுக்கு நாம் திரும்பும் போது, "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு : ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான்.3;3-5). தண்ணீர் ஒருவனுடைய

இரட்சிப்பிலே என்ன பங்கு வகிக்கிறது? அது எளிமையானதுதான். அது ஞானஸ்நானம் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. அதைப் பற்றித்தான் நாம் இங்கு விவாதிக்கிறோம். தேவனுடைய வார்த்தையின் மூலம் ஆவியானவர் ஒருவனை வழிநடத்தும் போது, ஞானஸ்நானத்தின் மூலம் அவன் மறுபடியும் பிறக்கிறான் (I பேதுரு.1;23) இப்படி நாம் செய்யும் போது, கிறிஸ்துவின் சபைக்குள்ளாக அல்லது கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்குள்ளாக நாம் வருகிறோம் என்று சொல்லுகிற I கொரிந்தியர் 12;13. ரோமர்.6;3,4 ஆகிய வசனங்களோடு இது ஒத்துப் போகிறது.

மீண்டுமாக பவுல் தீத்துவுக்கு எழுதுகையில் "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3;5). இங்கே மறுஜென்ம முழுக்கு என்பது, ஞானஸ்நானத்தின் தண்ணீருக்கு நம்மை கொண்டு செல்கிறது, அதைப் பற்றி தான் நாம் படிக்கிறோம். ஆகவே ஞானஸ்நானம் என்பது அடக்கமாகும். அது தண்ணீரில் அடக்கம் பண்ணுதல் ஆகும். இன்றைக்கு வேதாகமத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட ஞானஸ்நானம் அதுதான்.

ஞானஸ்நானம் நமக்கு என்ன செய்கிறது என்று வேதம் சொல்கிறதோ அதை வாசிக்கையில் அது எவ்வளவு முக்கியமானது என்பது விளங்கும். "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (I பேதுரு.3:21). ஞானஸ்நானம் மாத்திரம் நம்மை இரட்சிக்கிறது என்று அப்போஸ்தலன் கூறவில்லை, மாறாக ஆண்டவர் கட்டளையிட்டபடி ஒருவன் இதை செய்யும் போது அது அவனுக்கு இரட்சிப்பைத் தருகிறது. ஆனால் மீண்டுமாக, கிறிஸ்துவே சொல்லுகிறார். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்றார் (மாற்கு. 16;16). ஞானஸ்நானம் நம்மை எப்படி இரட்சிக்கிறது. விசுவாசித்து ஞானஸ்நானம் எடுத்தால் இரட்சிப்பு. இதை நிராகரிப்பது கிறிஸ்துவை நிராகரிப்பதாகும்.

தொடர்ந்து நாம் படிக்கையில் ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்காக கொடுக்கப்பட்டது. "பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்.2;38). சவுலிடம்

ஞானஸ்நானம் எடுத்து அவன் பாவங்களை கழுவும்படி சொல்லப்பட்டது. "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப் படு என்றான்" (அப்.22;16). மீண்டுமாக இது, ஆண்டவருடைய கட்டளையாயிருக்கிறது. "கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்" (அப்.10 ; 48).

இரட்சிப்பு, பாவமன்னிப்பு இன்னும் பல, காரியங்கள் இருப்பினும், இந்த கீழ்ப்படிதலுள்ள கிரியையின் மூலமாகத்தான் கிறிஸ்துவின் இரத்தத்தோடு நாம் சம்பந்தம் கொள்கிறோம். இதுதான் உண்மையில், நம்மை பாவத்திலிருந்து மன்னிக்கிறது. மத்.26;28-ல், இது பாவ மன்னிப்புக்காக சிந்தப்படுகிற இயேசுவின் இரத்தம் என்று எழுதப் பட்டிருக்கிறது. ஆனால், பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலன் பேதுரு, கூறுகையில், நாம் பாவ மன்னிப்பை பெற வேண்டும் என்றால், மனந்திரும்பி, ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இந்த எளிய கட்டளையை ஒருவன் கைகொள்ளும் போது, அவன் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பு ஏற்படுத்துவதால், பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப்படுகிறது. மீண்டுமாக, எபேசியர். 1;7 கொலோ. 1;4 என்ற வசனங்களில், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகத்தான் ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறதாக சொல்லப்படுகிறது. ஆனால் சவுலுக்கோ, பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளுமாறு சொல்லப்பட்டது. ஆகையால், ஞானஸ்நானத்தின் மூலமாகத்தான் ஒருவன் பாவங்களை கழுவும் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பு கொள்கிறான். ரோமர்.6ம் அதிகாரத்தில், நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம் என்கிறார். நாம் கர்த்தருடைய இந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் போது, அவருடைய மரணத்தின் பலனை அடைகிறோம் அதாவது பாவத்திலிருந்து மன்னிப்பை பெறுகிறோம்.

இறுதியாக, ஞானஸ்நானத்தின் மூலம் ஒருவன் ஆண்டவரோடு அடக்கம்பண்ணப்பட்டு, தண்ணீர் கல்லறையிலிருந்து எழுந்து புதிதான ஜீவனுள்ளவராக நடந்து கொள்கிறார். இது ஆண்டவரின் அடக்கம், உயிர்த்தெழுதலை நமக்கு காட்டுகிறது. கர்த்தருடைய வழியை நாம் இன்னும் சிறப்பாக மாற்றுவதற்கு ஒன்றுமில்லை. ஆகவே நாம் அதற்கு கீழ்ப்படிவோமாக!

**J.C. Choate** **ஜே.சி. சோட்.**

பெண்கள் பகுதி

# கணவருக்கு சரியானபடி உதவியாயிருக்கும் மனைவி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## I. பொதுவான பிரச்சனைகள் :

1. **முதலாவது கணவனுடன் பகிர்ந்து கொள்ளும் விஷயம்.** அவருடைய நேரம் உண்மையில் அவருடையதல்ல. அது மனைவியுடையதுமல்ல. அது தேவனுக்குச் சொந்தமானது. I பேதுரு 3 : 7ம் வசனத்தில் "நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நாம் அவர்களுடன் சேர்ந்திருக்க வேண்டும்" என்று வாசிக்கிறோம். உங்களுடைய கணவனுடன் உங்களை பரிமாறிக் கொள்வதென்பது, கிறிஸ்து தன்னுடைய இரத்தத்தை சிந்தி சம்பாதித்த சபைக்கு நாம் செய்யும் மிகச் சிறந்த பங்காகும். நீங்கள் அவ்வாறு பகிர்ந்து கொள்ளும் நேரங்களில் உங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட எல்லை இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதோடு மாத்திரமல்ல அவரோடு நீங்கள் பேசிப் பகிர்ந்து கொள்வது சமாதானத்தையும், அமைதியையும் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் ஆசீர்வாதம் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

பல சமயங்களில் மனைவிகள் தங்களுடைய பங்கை முழுமையாக புரிந்து செயல்படாதபொழுது பவுல் அப்போஸ்தலன் I கொரி : 7-32,33-ல் கூறியிருப்பது சரியாகத்தான் இருக்கிறது, "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். விவாகம் பண்ணினவன், தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்" உங்கள் இருதயத்தில் சரியான சிந்தையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். உங்களுடைய இலக்கு யாவும் உங்கள் கணவனின் இலக்கு போன்றே இருக்க வேண்டும்.

நீங்கள் அதற்காக செலவிடும் நேரம் ஒருவேளை உங்களுக்கு விசனத்தை கொடுக்கலாம் அல்லது கிருபையிலும், அறிவிலும் வளர்வதற்கு உதவியாயிருக்குமென்று உங்களை பழக்கப்படுத்திக் கொள்ளவும் முடியும். எப்படி தெரிந்து கொள்வீர்களோ அது உங்களைப் பொறுத்தது. ஒவ்வொரு நாளையும் கழிப்பது நீங்கள் தான்.

எபேசியர் 5 : 15, 16ம் வசனத்தில், "ஆனபடியினாலே, நீங்கள்

ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று பவுல் ஆவியானவரால் ஏவப்பட்டுக் கூறுகிறார். உங்கள் நேரத்தை திட்டமிட்டு ஞானமாய செலவழியுங்கள். அது உங்கள் நேரத்தை நீங்கள் எப்படி செலவழிக்கிறீர்களோ அது உங்கள் குடும்பத்தையும், நீங்கள் சார்ந்திருக்கிற சபையையும், உங்களையும் அது பாதிக்கக் கூடியதாக இருக்கிறது.

## 2. இரண்டாவது பிரச்சனை, குறை, நிறை ஆயும் தன்மை :

உங்கள் கணவன், உங்கள் பிள்ளைகள், உங்கள் மூலமாகவோ நீங்கள் இத்தன்மைக்கு தள்ளப்படலாம். இத்தன்மையானது பொதுவாக நிறைய சமயங்களில் மனதுக்கத்தை ஏற்படுத்தும். நீங்கள் ஒருவேளை யாரையுமே சந்தோஷப்படவைக்க முடியாமல் போகும். ஆனால், நீங்களும், உங்கள் கணவரும் உங்கள் குழந்தைகளும் சேர்ந்து அதை எப்படிக் கையாளுவது என்று தீர்மானிக்க வேண்டும்.

**இதற்கான இரண்டு ஆலோசனைகளைப் பார்ப்போம் :**

I பேதுரு 4 : 19-ல் உள்ளபடி முதலாவது **உங்களை** தேவனுக்கு ஒப்புக் கொடுத்து விடுங்கள். தேவனோடுள்ள உங்கள் உறவு சரியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். உங்களை யாராவது குறை கூறுவார்களானால் வேதாகமத்திற்குள் சென்று நீங்கள் தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்திருக்கிறீர்களா என்று பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு உங்கள் கணவரோடும் உங்களோடும் ஒப்புரவாகுங்கள். பிரச்சனையைப் பற்றி நீங்கள் இருவரும் பேசுங்கள். அதில் ஏதாவது உண்மையிருக்கிறதாவென்று பாருங்கள். ஒருவேளை தவறில் உண்மையிருந்தால் அதை எப்படி மாற்றிக் கொள்ள முடியுமோ அப்படி மாற்றிக் கொள்ளுங்கள். தேவனுக்கு சிறந்தவர்களாக இருக்கும்படியாக உங்களுக்கு உதவி செய்த சம்பந்தப்பட்ட நபருக்கு நன்றி சொல்லுங்கள். அப்படி பிரச்சனையில் உண்மையில்லையென்றால், மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது காரியமல்ல. நிறையப்பேர் இயேசுவையே குற்றம்சாற்றினார்கள். ஆனால் உங்கள் உறவு தேவனோடு சரியாக இருக்கிறதா என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். ஆக, தேவன் சொல்லியிருக்கும் வார்த்தையோடு உங்களுக்கு பிரச்சனை இருந்தால் உடனடியாக அதைக் கண்டுபிடித்து, உங்களை திருத்திக் கொள்ளுங்கள்.

I பேதுரு 2 : 19-23 வரை உள்ள வசனப் பகுதிகளின் படி கிறிஸ்துதான் எப்போதுமே உங்கள் இலக்காக இருக்க வேண்டும்.

அவருடைய மாதிரியை பின்பற்றி நடங்கள். அவருடைய பாடுகளோடும், வெற்றியோடும் உங்களுக்கும் பங்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களோடு இருப்பவர் யார் என்பதை ஒருபோதும் மறவாதிருங்கள். நீங்கள் ஒருபோதும் தனியாக விடப்படுவதில்லை. நீங்கள் இரண்டு மடங்காய் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். முதலாவது கிறிஸ்து உங்களோடு கூட இருக்கிறார். இரண்டாவது நீங்களும், உங்கள் கணவரும் ஒன்றாக இருக்கிறீர்கள். இது உங்கள் பிள்ளைகளுக்கு ஓர் சிறப்பான எடுத்துக் காட்டாக அமையும். (II தீமோத்.4:16-18).

லூக்கா : 6:28ல் தேவன் என்ன சொல்கிறார்? உங்கள் சத்துருக்களை நேசியுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள். நம்முடைய செயலின் மூலம் சுவிசேஷத்தை மறைத்து விடக் கூடாது. (I கொரி. 12 : 9).

நமது கணவன் சிறந்த ஊழியம் செய்யும்படியாக நாம் இருக்கும் போது தேவன் நமக்கு அதற்குண்டான பலனைத் தருவார்.

அவைகளில் சில : மத் : 25 : 23-ல் உள்ளபடி "உத்தமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்" என்று சொல்லுவார்.

சங்கீதம் : 16:11-ல் உள்ளபடி மகிழ்ச்சியும், சந்தோஷமும் கர்த்தருக்குள் இம்மையிலும், மறுமையிலும் கிடைக்கும்.

நெகேமியா 8:10 : தேவன் இங்கே கூறுகிறார், "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்" என்று.

I கொரி 15 : 57 : நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கிடைக்கும்.

எனவே கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கடந்த மாதமும், இம்மாதமும் பெண்களாகிய நாம் கர்த்தர் நமக்கு கொடுத்த கணவன்மார்களுக்கு அவர்கள் கர்த்தருக்காக பணியாற்றுவதில் நம்முடைய பங்கு எப்படியிருக்க வேண்டும் என்று வேதத்தின் துணை கொண்டு பார்த்தோம். வாசித்து கடைபிடிப்போம். நித்திய ஜீவனுக்காக வாழ்வோம். கர்த்தருக்கே பணி செய்து கிடப்போம். அவருக்கே சதா காலமும் துதியும், கனமும், மகிமையும் உண்டாகட்டும். ஆமென்.

**மேரி டீ பால்மா** **ரேச்சல் இராஜநாயகம்.**

# நமது ஆண்டவரின் அழைப்பு

தாயின் கருவறையிலிருந்து வெளிப்பட்டு அழுகையோடு தொடங்கிய வாழ்வின் விடியல். நாடி நரம்பெல்லாம் அடங்கி அமைதியோடு அஸ்தமனமாகும் வரை அழைப்புகள் நம்மை நோக்கி வந்த வண்ணமிருக்கும். வாலிபம் அடைந்த இருவர் வாழ்க்கைத் துணையாக மாறும் வைபோகமாகிய விவாக அழைப்பு, விருத்தாப்பியம் அடைந்த ஒருவரை மரணம் அழைத்ததால், நமக்கு வந்த அவசர அழைப்பு, அபாயத்தில் இருக்கும் ஒருவரை காப்பாற்ற வேண்டுமென்ற மனிதாபிமான அழைப்பு, வையகத்தில் உதித்த நாளை நினைவு கூறுகிறோம், வந்து எங்களை மகிழ்வியுங்கள் எனக் கோரும் வாழ்த்தழைப்பு என அழைப்புகளில் பல வகை உண்டு. இவையெல்லாம் நரர் தரும் அழைப்பாக இருக்கிறது. ஆனால் நம்மை உண்டாக்கின ஆண்டவர் நம்மெல்லாரையும் அழைக்கிறார் என்பதை அறியும் போது எத்தனை ஆனந்தமாக இருக்கிறது.

வாலிபத்திலிருக்கும் அநேகருக்கு அல்லது எல்லோருக்கும் பாவத்தின் வசீகர அழைப்பு வராமலிருப்பதில்லை. **"நான் உனக்கு இன்பத்தை தருவேன்"** என்று சொல்லித்தான் அந்த பாவம் நம்மை அழைக்கும். ஆனால் நம்பி அருகில் சென்றால் அனல் கக்கி நம்மை அழித்து விடும் என்பதை அதை அனுபவிக்கிறவர்களிடம் கேட்டறிந்து கொள்ளலாம். அநாதி தேவனோ, இந்த அநித்யமான பாவ சந்தோஷத்திற்கு நம்மை அழைக்காமல், நம்மை பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். (I தெச 4 : 7) அவர், நம்மை பரிசுத்தத்திற்கு அழைக்கும் போது, பரிசுத்த அன்போடு அழைத்திருக்கிறார். (II தீமோ 1:9) அந்த அழைப்புக்கு பாத்திரராக நடந்து, பரிசுத்தத்தைக் கொண்டால், பரலோகத்தில் நித்திய ஜீவனைத் தருவேன் என்று வாக்குச் செய்திருக்கிறார். நாம் அந்த பரலோகத்திற்கு பங்காளிகளாக மாற வேண்டுமென்ற உயரிய நோக்குடன் இயேசுவானவரின் அழைப்பை மூன்றாக வகைப்படுத்தி உங்கள் முன் வைக்கிறேன் பரம அழைப்புக்கு பங்காளிகளாவீர்களென்ற முழு நம்பிக்கையோடு.

## முதல் அழைப்பு "என்னிடத்தில் வாருங்கள்"

பாவத்தின் பயங்கரப் பிடியிலிருக்கிற பாரின் மக்களுக்கு பரமனின் பாசமிகு அழைப்பிது, கடிகாரத்தின் நொடி முள் முதல் முதல் ஓடத் துவங்கிய நாள் முதல், சகல அதிகாரமும், ஆதரையும், அக்கினிக்கிரையாகி, கடிகார முள் ஓடுவதிலிருந்து ஓய்வுற்று காலம் முடியும் வரைக்கும், **மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்ட அழைப்பிலேயே**

**தனக்குவமையில்லாத தற்பரன், தாவீதின் குமாரன் தந்த, "மனக் கவலை மாற்றி இளைப்பாறுதல் தருவேன்", என்ற ஆறுதலின் அழைப்புக்கு ஒப்பானதுமில்லை, மிகையானதுமில்லை.** இவ்வழைப்பு யாருக்குக் கொடுக்கப்பட்டதென்று சிந்திக்கலானால் "வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களுக்கு" எனப் புலப்படுகிறது. (மத் 11 : 28) வருத்தமில்லாத மனிதனை நாம் தாரணியில் தேடினாலும் தென்படமாட்டான் என்பதுறுதியாகையால், மனுக்குலம் முழுமைக்கும் விடுக்கப்பட்ட கருணை அழைப்பிது எனக்கருதுவதில் தவறேதுமில்லை..

வாலிபர்களே! இன்று அநேகர் எனக்கன்பானவரை இழந்து போனேனென்று அங்கலாய்ப்பதையும், தீராத வியாதியால் என்னை நேசித்தவர்கள் நோயுற்று அவதிப்படுகிறார்களே என்று ஏக்கமடைவதையும், இவன் என் உயிர் நண்பனென நம்பி இருந்தேனே, இப்படி ஏமாற்றி விட்டானே என புலம்புவதையும், நன்மை செய்தும் பாதகரின் பரிகசிப்பைத் தாங்க முடியவில்லையே என்று பதறுவதையும் காண்கிறோம். இப்படி வருத்தங்களை சுமக்கும் நமது ஆவி இளைப்பாறுதலுக்காக கதறுவதுண்டு. அப்படிக் கதறும் நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு ஆறுதல் தரும் அன்பான இயேசு ஆண்டவர் கொடுக்கும் பதிலோ, **'என் நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்"** என்பது தான்.

சிலரோ, நமது ஆண்டவரின் இந்த அழைப்பைப் பற்றி, "அது எப்படி? நாங்களே சுமக்க முடியாமல் தவிக்கும் போது, மீண்டும் ஒரு நுகம் எங்களுக்கு சுகம் தருவதெப்படி" என்கிறார்கள். நாங்கள் ஒருவருக்கும் அடிமையில்லை, விடுதலை கீதம் முழங்கி சுதந்திர காற்றை சுவாசிக்கும் சுந்தரர்கள் நாங்கள் எனச் சொல்லுகிறார்கள். ஆனால் வாலிபனே! தேவன் நமக்கு கொடுத்திடும் மதியை பயன்படுத்தி பார். யாராவது ஒருவன், நான் யாருக்கும் அடிமையில்லை என்று சொன்னாலும், அவன் தன் ஆசைக்கும், ஆவலுக்கும், சுயத்திற்கும் அடிமை! அது மிகவும் கனமான சுமையைத் தரக்கூடியது உண்மைதான் என்பதில் எள்ளின் நுனி அளவும் சந்தேகமில்லை! அநேகர் இப்படிச் சொல்லி முடிவில் பயத்துடன், கசப்புடன், வாழ்வின் பொருள் இழந்து முடிந்தார்கள் என்பது வரலாறு.

விடுதலை வேட்கை தணித்தோம், சுதந்திர வேங்கையாக மாறினோம் என்று சொன்னவர்கள், சுயம் என்ற தங்கள் முரட்டுச் சங்கிலிகளால் கட்டப்பட்டு, பாவம், நம்பிக்கையின்மை என்ற உளையில் அமிழ்ந்தே போனார்கள் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. எனக்கன்பானவர்களே! ஒன்றை மாத்திரம் உணர்ந்து கொள்ளுங்கள். **ஒன்று பரமனுக்கடிமை அல்லது பாவத்திற்கு அடிமை (ரோமர் 6:6-18) நடுநிலை என்றொன்றில்லை, பாவம் தரும் சுமையை விட, பரமன் இயேசு தரும் சுமை "இலகுவாக இருக்கும்" அவர் நம்மேல் சுமப்பதற்கரிய சுமையை**

**சுமத்துவதில்லை, அவர் நுகமோ "மெதுவாக இருக்கும்" இதை நாம் விசுவாசித்து ஏற்றுக் கொண்டு அவரிடம் வருவோம்.**

ஒருவருக்கும் அடிமையல்லன் என்பவன் அறிவீனனாக இருக்கிறான். அவன் பாவத்திற்கும், பிசாசுக்கும் அடிமையாக விளங்குகிறான். அதற்கு அவன் சாத்தானிடமிருந்து பெற்றுக் கொள்ளப் போகிற ஒரே சன்மானம் "மரணம்" (ரோமர் 6 : 23) சரி, பாவத்தின் நுகத்தை எறிந்து விட்டு, பரமன் நுகம் சுமக்க நாம் என்ன செய்ய வேண்டும்?, அவரை விசுவாசித்து வந்த நாம், பாவத்தை இனி செய்ய மாட்டோம் என விரும்பி முடிவெடுத்து, மனந்திரும்பி, இயேசுவானவரை தேவ சுதன் என்று மனச்சுமை நீங்க சுகமாய் வாயினால் அறிக்கையிட்டு, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16 : 16) என்ற வசனத்திற்கு கீழ்படிய வேண்டும். இப்படித்தான் மகத்தான அப்போஸ்தலன் பவுலும் தன் பாவத்தைக் கழுவினார் (அப் 22 : 16) ஞானஸ்நானத்தில் தான் இயேசுவின் மரணத்தோடு நாம் தொடர்பு கொள்கிறோம், அங்குதான் மனுக்குலத்தின் பாவம் போக்கும் தன் மாசில்லா தூய திரு இரத்தத்தை அவர் சிந்தினார் (ரோமர்.6:3,4).

## இரண்டாம் அழைப்பு "என் பின்னே வாருங்கள்"

நமதாண்டவரின் முதல் அழைப்பை ஏற்றுக் கொள்வது முக்கியமானாலும், அது மாத்திரம் போதாது, நாம் அவரைப் பின்பற்ற வேண்டும், "பின்பு அவர் எல்லாரையும் நோக்கி : ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, **என்னைப் பின்பற்றக் கடவன்**" என்றார் (லூக்கா.9:23). தன்னைத்தான் வெறுப்பதென்பது எளிதான ஒன்றல்ல, அதுவும் வாலிபத்திலிருக்கும் உங்களுக்கு இது இன்னும் அதிகமாக பொருந்தும், ஆனாலும் முடியாததை ஒருபோதும் நம்மிடம் தேவன் கேட்பதில்லை, ஆவிக்குரிய சிந்தையோடு, முயற்சியும், பயிற்சியும் இணைந்து விட்டால் வாலிபர்களே! நீங்களும் வெற்றிச் சிகரமெட்டலாம் என்பது திண்ணம்.

வாலிபர்களே! உண்மை கிறிஸ்தவனாக வாழ்வதற்கு நமக்கு அதிக பெலன், தைரியம், பொறுமை தேவை, நமக்கு சாட்சிகளாக இருக்கிற நோவா, தானியேல் யோசேப்பு, பவுல் இவர்களைப் பற்றி சிந்தியுங்கள். எத்தனை கேலி, கிண்டல், கெக்கலிப்புக்கு மத்தியில் பேழையைக் கட்டினார் நோவா, தனிமையை இரவெல்லாம் எப்படி சிங்கத்தோடு கழித்தானோ தானியேல், பாவ சுகம் தன்னை கவர்ந்திழுத்தும், அப்பாவக் கயிற்றை அறுத்தெறிந்த யோசேப்பு, பசியிலும், பட்டியினிலும், துரோகத்திலும், வைராக்கியத்தோடு ஊழியம் செய்த பவுல், இவர்களும் மனிதர்கள் தானே! அவர்களால் செய்ய முடியுமானால், நம்மால் ஏன் முடியாது, பரமன் நம்மை பெலப்படுத்துவார் நம்மால் நிச்சயம் முடியும்.

நம்முடைய பகைவரையும் நேசிப்பதற்கும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுவதற்கும், நமக்கு தீமை செய்கிறவர்களுக்கு தீமை செய்யாதிருப்பதற்கும் மிகுந்த தைரியமும் மனப்பக்குவமும் அவசியமாகிறது. நன்மை செய்து பாடநுவிப்பது எளிதான ஒன்றல்ல, கிறிஸ்துவின் கட்டளைகளை பின்பற்றுவது போகிற போக்கிலே வந்துவிடுவதில்லை. நாம் அதற்காக ஜாக்கிரதையாக தொடர்ந்து முயற்சி செய்வதவசியம். ஆனால், நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர், அவர் நம்முடைய ஆத்துமா ஈடேற உதவி செய்வார். ஆம், அழைத்தவர் அப்படியே செய்வார்!!

## மூன்றாம் அழைப்பு "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே!"

தரணி தீக்கிரையாகி அக்கினியால், அழிந்து போகும் நாளாகிய நியாயந்தீர்ப்பு நாளில், இந்த மகத்தான அழைப்பு, நமதாண்டவர் இயேசுபிரானால் தன்னுடைய முதல் இரண்டழைப்பாகிய "என்னிடத்தில் வாருங்கள்", "என் பின்னே வாருங்கள்" என்பவைகளை ஏற்றுக் கொண்டு, நிறைவேற்றியவர்கட்கு விடுக்கப்படும். அந்த அருமையான நாளில் நாம் வார்த்தையால் வர்ணிக்க முடியாத பரலோகம் சென்றடைய வேண்டுமானால் இப்பொழுதே முதல் இரண்டு அழைப்புகளை ஏற்றுக் கொள்வோம். நிறைவேற்றுவோம். பரலோக பாக்கியத்தை பெற்றிடுவோம். ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்.**


## மற்றொரு வாய்ப்பு

சபையில், குடும்பத்தில், சமுதாயத்தில் பெண்களின் பங்கு பற்றி அழமான கருத்துக்களை, வேதத்தின் வெளிச்சத்தில் அலசி ஆராயும் ஒரு நூல்தான் "**திருமறையில் பெண்ணின் பங்கு**". இந்நூல் பெண்களுக்கும், வேதாகம ஆசிரியர்களுக்கும், சபை விசுவாசிகளுக்கும், வேதாகம மாணவர்களுக்கும் மிகவும் பயன்படும். புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால் தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 20

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701. இந்தியா.

*குறிப்பு : M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# II தீமோத்தேயு ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 67 - 65 க.பி.

## இந்நூல் பற்றி

1. ரோமாபுரி சிறையிலிருந்து இந்நூல் எழுதப்பட்டது (1 : 7, 8, 16, 17)
2. பவுல், தன் விசுவாசத்திற்காக மரிக்கும் தருவாயில் இந்நூலை எழுதினார் (4:6-8)
3. பவுல், இரண்டாம்முறை சிறையில் இருந்த போது இந்நூலை எழுதியிருக்கிறார் எனத் தெரிகிறது. ஏனென்றால், அவர் முதல் முறை இரண்டாண்டு சிறையிலிருந்ததை பற்றி அப்போஸ்தலர் 28ம் அதிகாரத்தில் நாம் காணலாம்.
4. அப்போஸ்தலனாகிய பவுல், முதலாம் தரம் சிறையிலிருந்த போது, தான் விடுதலையாவேன் என எதிர்பார்த்தார் (பிலி.1 : 25; பிலே.22), அவர் விடுதலை பெற்று, ஸ்பானியாவில் சுவிசேஷத்தை பிரசங்கித்தார் என நம்பப்படுகிறது (ரோ.15 : 24), கி.பி.64ல் ரோம் தீப்பற்றி எரிந்தபொழுது, நீரோ மன்னன் அதற்கு கிறிஸ்தவர்கள் தான் காரணம் எனக் கருதி அவர்களை துன்பப்படுத்தினதின் விளைவாக பவுல் இரண்டாம் முறை சிறை சென்றார் என நம்பப்படுகிறது. அப்பொழுது இக்கடிதத்தை அவர் எழுதியிருக்கிறார்.
5. பவுலின் அந்நிய காலத்தில் இந்நூல் எழுதப்பட்டது, அவருக்கு நெருக்கமானவர்கள் அவரை விட்டுப் பிரிந்தார்கள் (4:10-12), ஆனால் தீமோத்தேயுவோ, இவருக்கு **"பிரியமுள்ள குமாரன்"**, ஆகவே அவனை பார்க்க வேண்டும், அவனால் ஆறுதலடைய வேண்டும் என விரும்பி இந்நூலில் அதை வெளிப்படுத்துகிறார்.
6. இந்நூல் எழுதப்பட்ட போது, கள்ள போதகர்கள் சபைகளில் தலைதூக்க ஆரம்பித்து விட்டார்கள். (1:15; 2:16; 16-18; 3:1-9;13). தீமோத்தேயுவை அதற்கு ஆயத்தமாக்க இந்நூல் எழுதப்பட்டது (1:8, 12; 2:3; 3:12)

## இந்நூலின் செய்தி

1. வீட்டில் பிள்ளை வளர்ப்பு மிக முக்கியமானதும் (115;3:14,15)
2. மற்ற கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாக இருப்பதற்காக, கள்ள போதகர்களை பெயர் சொல்லி குறிப்பிடுகிறார். (1:15;2:17,18)
3. தேவனுடைய வார்த்தை பகுத்துப் போதிக்கப்படுவதின் முக்கியத்து - வத்தை வலியுறுத்தும்படியாக (2:15)
4. கிறிஸ்தவர்கள் துன்பத்தை எதிர்நோக்க வேண்டும் (3:12)
5. வேத வாக்கியம் எல்லாவற்றிற்கும் பிரயோஜனமானது (3:16, 17)

# மோசேயும் பார்வோனும்- நேருக்கு நேர்



நமதாண்டவரால் மிகவும் அதிகமாக நேசிக்கப்படுகிற எனக்கன்பான சிறு தம்பி, தங்கைகளே உங்களை இம்மாதமும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த சிறு பிராயத்திலிருந்தே நாம் கர்த்தருக்காக வைராக்கியமாக, அவர் நமக்கு கொடுத்த தாலந்துகளை அவருடைய நாம மகிமைக்காக, பயன்படுத்த வேண்டுமென்பதற்காக, பழைய ஏற்பாட்டு மாமனிதன் மோசேயின் வாழ்க்கைப் பற்றி படித்து அறிந்து கொள்வோம்.

முட்செடியின் நடுவிலிருந்து தேவன் மோசேயிடம் பேசின போது அவனுக்கு வயது எண்பது. சரி, தேவன் அப்படி என்ன பேசினார் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன். மோசே எகிப்திற்கு திரும்பி பார்வோன் ராஜாவின் முன்பாக நின்று அவனிடம் தேவனுடைய வார்த்தையைப்பேச வேண்டும் என கூறினார். ஆனால் மோசேயோ தயங்கினான். அவனுக்கு அங்கு செல்ல விருப்பமில்லை! மற்றுமாக அதற்கான ஐந்து காரணங்களைக் கூறினான். சில சமயங்களில் தேவன் என்ன செய்ய நினைக்கிறாரோ அதை நாம் செய்யத் தயங்குகிறோம்.

சரி, மோசே என்னதான் சொன்னான்? வாருங்கள்! சேர்ந்து படிக்கலாம். முதலாவதாக அவன் "**நான் எம்மாத்திரம்**" என்றான். ஆனால், பதிலுக்கு தேவன் என்ன சொன்னார் தெரியுமா? நான் உன்னுடன் இருக்கிறேன்" என்றார். இரண்டாவது அவன், "நான் இஸ்ரவேலரிடம் போய் உங்கள் பிதாக்களின் தேவன் உங்களிடத்தில் .என்னை அனுப்பினார் என்று சொல்லும் போது **அவருடைய நாமம் என்ன என்று கேட்டால் நான் என்ன சொல்லுவேன்**"

என்பது. அதற்கு தேவன் நான் இருக்கிறவராகவே இருக் கிறேன் என்று சொல் என்றார். அவனுடைய மூன்றாவது காரணம் "**அவர்கள் என்னை நம்பார்கள் என் வாக்குக்கு செவி கொடார்கள்**" என்பது. ஆனால், தேவனோ "உன் கையிலிருக்கிற கோலை தரையிலே போடு" என்றார். போட்ட போது அது சர்ப்பமாக மாறியது திரும்பவும், அதின் வாலைப் பிடித்த போது, சர்ப்பம் கோலாக மாறியது. பின்னும் அவனுடைய கையை மடியிலே போட்டபோது அவன் கை வெண்குஷ்டம் பிடித்தது போல் மாறியது. மறுபடியும் மடியிலே போட்டபோது அது மற்ற சதைகளைப் போல் ஆனது.

அவன் கூறிய நான்காவது காரணம் "**நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன்**" என்பது. அதற்கு தேவன் உன் சகோதரனாகிய ஆரோனை அழைத்துக் கொண்டு, கோலையும் எடுத்துக் கொண்டு போ! அது உனக்கு போதும் என்று சொல்லி அனுப்பினார். இதற்கு பிறகு மோசே ஒத்துக் கொண்டு, தேவன் அவனுக்கு சொன்ன வண்ணமாகவே புறப்பட்டுப் போனான். முதலாவது முறை அவர்கள் பார்வோனை சந்தித்த போது மோசேயும், ஆரோனும் நீர் இஸ்ரவேலர்களை விடுவிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்றார்கள். ஆனால் பார்வோனோ "நான் கர்த்தரை அறியேன் நான் இஸ்ரவேலை விடுதலையாக்க மாட்டேன் என்று கூறுகிறான் (யாத்.5;2) இரண்டாவது முறை சந்தித்த போது ஆரோன் தன் கையிலிருந்த கோலை தரை யிலே போட்டான். அது பாம்பாக மாறியது. ஆனால் பார்வோனின் மந்திரவாதிகளும் அதே போல் செய்தனர். ஆரோனுடைய கோல் மற்ற கோல்களை விழுங்கியது. பார்வோன் தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் கீழ்ப்படியாமற் போனபடியால் தேவன் அவனைத் தண்டித்து தனக்கு கீழ்ப்படியப் பண்ணினார். அதினால் தேவன் பத்து வாதைகளை எகிப்தின் மீது வரப்பண்ணினார். அந்த வாதைகள் இஸ்ர வேலர்களை விடுவிப்பதற்காகவே வரப்பண்ணினார். ஆனால், அதி முக்கியமானது என்னவென்றால் அவ்வாதைகள் எகிப்துக்கும், பார்வோனும் உலகிற்கும். **நம்முடைய தேவன் உண்மையான ஒரே தேவன்** என காட்டியது. அப்படிப்பட்ட தேவன் நமக்கு இருக்கிறபடியால் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்குப் பிரியமாக நடப்பது அவசியம். ஆகவே நாம் அவருக்கு பிரியமாக இச்சிறு பிராயத்திலிருந்தே வாழ்வோமாக!

**R. Abel Rodger Nayagam**

# "தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்"

(எபேசியர்.4:30)

பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள் என்ற தேவ கட்டளையைக் குறித்து நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற பிறகு, ஆவியில் வளரவும், முன்னேற்றம் அடையவும் தவறுவோமானால், அதன் மூலம் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம் என்று கடந்த இதழ்களில் கண்டோம். பிறகு, கடந்த செம்படம்பர் மாதம், வளர்ச்சியடைவதற்கும், முன்னேற்றமடைவதற்கும் முக்கியம். கிறிஸ்துவை கற்றுக் கொள்வதென்று எபேசியர் 4;20,21 வசனங்கலிருந்து கற்றுக் கொண்டோம். அதாவது, கிறிஸ்துவை நாம் முற்றிலும் அறிந்து கொள்ளுகிறவர்களாயிருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டை கவனமாய்ப் படிப்பதன் மூலமும், அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பதன் மூலமும், தினந்தோறும் வேத வசனங்களைப் படித்து, கைக்கொண்டு நம்முடைய மனதில் பதிய வைப்பதன் மூலமும் இதைச் செய்யலாம். இவைகளைச் செய்வதன் மூலம், கிறிஸ்துவைப் போலச் சிந்திக்கவும், பேசவும், வாழவும் அவருடைய சிந்தையைப் பெற முயற்சித்து, தேவனை மகிமைப்படுத்துகிறோம்.

நாம் பொய் சொல்லும் போது, தேவனுடைய ஆவியை துக்கப்படுத்துகிறோம் என்று எபேசியர் 4;25-ல் தெளிவாகக் கண்டோம். ஆகவே, நாம் எப்பொழுதும் உண்மையே பேச வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். மேலும் எபே.4;26-ல் நாம் பாவம் செய்யும் அளவுக்கு கோபங் கொண்டு, சூரியன் அஸ்தமிக்கும் வரை எரிச்சல் தணியாமலிருக் குமானால், நாம் தேவனுடைய ஆவியை துக்கப்படுத்துகிறவர்களா யிருப்போம் என பார்த்தோம். கோபங்கொண்டாலும், பாவம் செய்யாதிருங்களென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், பாவமாயிராத கோபமும் உண்டு என்று கண்டோம். அந்தக் கருத்தை வேறு வசனப் பகுதியிலும் கண்டுபிடித்தோம்.

## நம்முடைய கோபம் எப்படிப் பாவமானதாயிருக்க முடியும்?

**முதலாவது :** நாம் நியாயமில்லாமல் சகோதரனைக் கோபித்துக் கொண்டால் நாம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்போமென்று இயேசுவானவர் சொல்லியுள்ளார் (மத்.5;22). ஆகவே, அந்த வகையான கோபம் பாவமாகும் என்று தெளிவாகத் தெரிகிறது.

**இரண்டாவது :** நம்முடைய கோபத்தை, பழிவாங்குவதற்கு நாம் அனுமதிக்கும் போது அது பாவமாகும். பழிவாங்குதல் எனக்குரியது நீங்கள் பழிவாங்கவேண்டாமென்றும் தேவன் நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறபடியால் இது உண்மையானதாக இருக்கிறது (ரோமர்.12:19). நாம் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து, கோபத்தால் பழிவாங்குவோமானால், நம்முடைய கோபம் பாவமாகும்.

**மூன்றாவதாக :** நமக்கு விரோதமாக காரியஞ்செய்கிறவர்களை நான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன் என்று சொல்லுவோமானால், நம்முடைய கோபம் பாவமாகும். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னிக்க மாட்டார் என்று இயேசு மிகத் தெளிவாகச் சொல்லியுள்ளார் (மத்.6;15).

**நான்காவதாக :** ஒருவேளை, எனக்கும், உங்களுக்கும் நீதியான கோபமிருந்தால் கூட, அந்தக் கோபம் பாவத்திற்கு வழிநடத்த முடியும். உதாரணமாக, கருக்கலைப்பானது, குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்துகிறதாயிருக்கிறபடியால், தேவனுக்கு அருவருப்பானது (நீதி. 6;17). ஆகவே, தாயின் கர்ப்பத்திலே லட்சக்கணக்கான குழந்தைகள் ஒவ்வொருவருடமும் கொல்லப்படுகிறார்கள் என்ற உண்மை, நமக்கு நீதியான கோபத்தை வருவிக்கும். இருப்பினும், நம்முடைய கோபம், கருக்கலைப்பு நடைபெறுகிற இடங்களைக் **குண்டுபோட்டு அழிக்கவும் அல்லது அப்பொழுது அது பாவமாகும்.** நாம், தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லவேண்டும் (ரோமர்.12;21).

**ஐந்தாவதாக :** நானும், நீங்களும் சில நேரங்களில் தேவன் கட்டளையிட்டதை ஒருவர் செய்ததற்காக, கோபப்படுகிறோம், அது பாவமாகும். நாம் ஒரு பாவம் செய்தபோது கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் நம்முடைய சகோதரர் எங்களிடத்தில் வரட்டும் என்று நாம் சொல்வோமாக. நாம் அந்தப் பாவத்திலிருந்து மனந்திரும்பி, தேவனோடும், மற்றவர்களோடும் நம்முடைய உறவைச் சீர் செய்ய நம்முடைய சகோதரர் நம்மை ஊக்கப்படுத்துகிறார். நம்முடைய பாவத்தினிமித்தம் நம்மிடத்தில் வரும் நம்முடைய சகோதரர் கலாத்தியர் 6;1 மற்றும் யாக்.5:19, 20 ஆகிய வசனங்களில், தேவன் என்ன கட்டளையிட்டிருக்கிறாரோ அதைத் தான் அங்கே செய்கிறார்கள். சரியானதைத்தான் அவர் செய்கிறார்.

ஆனால், நானும், நீங்களும், தேவன் செய்யச் சொன்னதை நம்முடைய சகோதரர் செய்ததற்காகக் கோபப்பட்டால் எப்படி? அங்கே நம்முடைய கோபம் பாவமாகிறது.

**ஆறாவதாக** : சூரியன் அஸ்தமிக்கும் வரை நம்முடைய கோபம் தணியாமலிருக்க நாம் அனுமதிப்போமானால், அது பாவமாகும். அதாவது, கோபம் நம்முடைய இருதயத்தில் தங்க அனுமதிக்கக் கூடாது. நாம் அதைச் சரியான வகையில் கையாள வேண்டும். வேகமாகவும் செய்ய

வேண்டும். ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? ஏனென்னில், "மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்" என்று தேவன் சொல்லுகிறார் (பிரசங்கி.7;9).

அடுத்து, தயவு செய்து எபேசியர் 4;27-ல் தேவன் என்ன சொல்லுகிறார் என்று வாசியுங்கள்.

"பிசாசுக்கு இடங்கொடுக்கும் போது", நானும், நீங்களும் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். அதாவது, பிசாசின் சோதனையில் அகப்படும் போது நாம் பாவம் செய்கிறோம். இந்தப் பகுதி, நம்முடைய கோபத்தில் பாவம் செய்கிறதைக் குறிக்கிறதாகத் தெரிகிறது (எபே.4;26).

இருப்பினும், பிசாசை எதிர்க்க வேண்டுமென்ற தேவ கட்டளையையும் இது குறிக்கிறதாகவே தோன்றுகிறது. யாக்கோபு 4;7-ல், தேவனுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும் கீழ்ப்படுத்த வேண்டுமென்றும் யாக்கோபு கூறுகிறார். அதாவது, நம்முடைய விருப்பத்தை தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். கீழ்ப்படுத்த வேண்டும். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்றும் கட்டளை கொடுக்கிறார். ஆகவே, நாம் பிசாசை எதிர்க்க மறுப்போமானால், நாம் பிசாசுக்கு இடம் கொடுத்து, தேவனை துக்கப்படுத்துகிறோம்.

பிசாசை எதிர்த்து நிற்கிற காரியத்தில், இயேசுவானவரின் பூரணமான மாதிரியை நினைவில் கொண்டு அதைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். மத்.4;10 வசனப் பகுதியில், பிசாசு, இயேசுவானவரை சோதித்தான் என்று வாசிக்கிறோம். நம்முடைய இரட்சகர் பிசாசை எப்படி எதிர்த்தார்? **பிசாசு எப்படித் தவறு செய்தான் என்பதற்கு மூன்று முறை, தேவனுடைய வாக்கியங்களை மேற்கோள் காட்டினார்.** தேவனுடைய வார்த்தைகளை முறையாக அறிந்து, சரியாகப் பயன்படுத்துவோமானால், நாமும் பிசாசை எதிர்க்க முடியும்.

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்து, அதைத் தரித்துக் கொள்வதன் மூலம், நானும், நீங்களும், பிசாசை எதிர்த்து அவனைத் தோல்வியடையச் செய்ய முடியும். (எபேசியர்.6;10-17). அந்த சர்வாயுதம், சத்தியம், நீதி, சமாதானத்தின் சுவிசேஷம், நம்பிக்கை, இரட்சிப்பு, தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம் ஆகிய இவைகளை உள்ளடக்கியதாக உள்ளது.

பிசாசு நம்முடைய எதிராளியாயிருந்து, எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிற கெர்ச்சிக்கிற சிங்கம் போல இருக்கிறான் என்று தேவன் விவரிக்கிறார் (1. பேதுரு. 5; 8,9). சுவிசேஷமாகிய விசுவாசத்தில் நாம் உறுதியாயிருந்து அவனை எதிர்த்து நிற்க வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார். அவனை எதிர்ப்பதிலே ஒருவகை, தெளிந்த புத்தியும் விழித்திருப்பதுமாகும்.

இந்த வழிகளில் நாம் பிசாசை எதிர்த்தோமானால், அவனுக்கு இடங்கொடாமலிருந்து, தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாயிருப்போம். ஆனால் நாம் எதிர்த்து நிற்காதே போனால், தேவனை துக்கப்படுத்துவோம்.

தயவு செய்து எபே.4;28-ஐ வாசிப்போம். திருடுகிறவர்கள் இனித் திருடாமலிருக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார். ஆகையால், நானும், நீங்களும் திருடும்போதும், தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். 1.கொரி.6;10-ல் திருடர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்று தெளிவுபடக் கூறியுள்ளார். இதனால், திருடுகிறது பாவமென்று பளிச்செனத் தெரிகிறது.

ஆனால், தான் செலுத்த வேண்டிய வருமான வரியைச் செலுத்துவதற்குப் பதிலாக பொய் சொல்லுகிற அல்லது ஏமாற்றுகிற ஒருவன் எப்படிப்பட்டவன்? அப்படியே, தான் பெற்றுக் கொள்ளுகின்ற ஊழியத்திற்கு ஏற்றபடி உண்மையாய் உழைக்காத ஒரு வேலைக்காரன் எப்படிப்பட்டவன்? இந்தக் காரியங்கள் திருடுகிறதாகாதா? ஆகவே, தேவன் இவைகளைக் கண்டிப்பதில்லையா? இவைகள் குறித்து கவனமாய் சிந்தித்துப் பாருங்கள்.

மல்கியா 3;8-ல் இடம் பெற்றுள்ள வசனத்தின் மூலம் தேவன் சொல்லியிருப்பது என்ன? பழைய ஏற்பாட்டின் நாட்களிலே, தன்னுடைய ஜனங்கள் தன்னை வஞ்சிக்கிறார்கள் அல்லது தன்னிடத்தில் திருடுகிறார்கள் என்று குற்றப்படுத்துகிறார். தேவனை அவர்களை எப்படி வஞ்சித்தார்கள்? தசமபாகத்திலும், காணிக்கைகளிலும் தன்னை வஞ்சித்ததாக தேவன் கூறியுள்ளார்.

அதே மல்கியா 1;7,8 ஆகிய வசனங்களில் அவர்கள் அசுத்தமான அப்பத்தையும், கண் ஊமையானதும், காலூனமானதும், நசல் பிடித்ததையும் தேவனுக்குப் பலியிட்டிருக்கிறார்கள். அதாவது, தங்களிடமுள்ள சிறந்ததை தேவனுக்குப் பலி செலுத்தாமல், குறைவுள்ளதைத் தந்துள்ளனர். அந்த வகையில், அவர்கள் தேவனை வஞ்சித்திருக்கிறார்கள். தேவன் சொல்லுகிறார். அது பொல்லாப்பானது என்று.

இக்காரியத்தில் நானும், நீங்களும் எப்படி? தேவனுக்குக் கொடுப்பதில் நாம் அவரை வஞ்சித்துக் கொண்டுள்ளோமா? நாம் அப்படிச் செய்கிறவர்களாயிருந்தால் அல்லது வேறு ஏதாவது வகையில் திருடுகிறவர்களாகவும், தேவனை வஞ்சிக்கிறவர்களாகவும் இருந்தால், நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம்!

கர்த்தருக்குச் சித்தமானால், திருடுவதைத் தவிர்த்தால் மட்டுமே போதாது என்பதை, அடுத்த மாதம் நாம் பார்க்க இருக்கிறோம். தொடர்ந்து நான் உங்களோடு சேர்ந்து படிப்பதற்கு ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

**EZSR** **Charlie Di Palma**

# நீதியான நியாயத்தீர்ப்பு

இந்தக் கட்டுரையை வாசிக்கிற யாவருக்கும் பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்க்கப்போகிற இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசு கிறிஸ்து வரப்போகிறார் என்று, இன்று எல்லா மூலை முடுக்குகளிலும் அநேகர் பிரசங்கிக்கிறார்கள். எல்லாரும் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பறை சாற்றி கொண்டு இருக்கிறார்கள்.

அதில் ஒருசிலர் இயேசு இந்த வருடத்தில் தான் வருவார் என்று தீர்க்கதரிசிகள் போல் காலத்தைக் கணக்கிட்டு தேவனுடைய தீர்க்கதரிசிகள் என்று காண்பித்து தங்கள் கள்ளதரிசனத்தின் மூலமாக மக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பணத்தை பிடுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து "அந்த நாளையும் அந்த நாழிகையும் என்பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். "(மத்.24;36) என்று இன்றைய கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு மீண்டும் ஒருமுறை சவுக்கடி கொடுக்கிறார்.

இயேசு கிறிஸ்து நியாயத்தீர்ப்பை குறித்துச் சொல்லும் போது இரண்டு வகை ஆடுகளைக் குறித்து மத்தேயு 25ம் அதிகாரத்தில் பேசுகிறார். செம்மறியாடுகள் தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிந்தவர்கள் என்றும் வெள்ளாடுகள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்கள் என்றும், பிரித்து இங்கே இயேசு கிறிஸ்து பேசுகிறார். செம்மறியாடுகளை நித்திய ராஜ்ஜியத்திற்கும் வெள்ளாடுகளை நித்திய ஆக்கினைக்கும் ஒப்புக் கொடுப்பார் என்றும் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவுக்கு பின்பு அவருடைய அப்போஸ்தலர்கள் நியாயத் தீர்ப்பு யாருக்கு இருக்கிறது என்பதை தங்களுடைய நிருபங்களில் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலே தெளிவாக எழுதியிருக்கிறார்கள். அதைக் குறித்து இந்த கட்டுரையின் மூலமாக நாம் அறிந்து கொள்வோம்.

### தேவனை அறியாதவர்கள் : (2.தெச.1;7)

உலகத்தில் இன்று அநேக மதங்கள் தோன்றி மனிதனை நல்வழிப்படுத்துகிறோம் என்று சொல்லி ஜனங்களை சீரழித்து, சின்ன பின்னமாக மாற்றி படாதபாடுபடுத்திக் கொண்டு இருக்கிறது. சில மனிதர்கள் தங்களை கடவுளின் அவதாரம் என்று சொல்லி புதிய மதங்களை தோற்றுவித்து நாட்டையும், மக்களையும் தங்களுடைய காலடியில் விழ வைத்து பணம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். மதியில்லாத ஜனங்கள் இப்படிப்பட்ட போலி சாமியார்களின்

வார்த்தைகளுக்கு மதிமயங்கி உண்மையான தேவனை விட்டு இவர்களுடைய காலில் விழுந்து வழிபாடு செய்து வணங்கி கொண்டு இருக்கிறார்கள்.

இன்னும் சிலர் மண்ணையும், கல்லையும், பொன்னையும் உருவம் செய்து அதை கோடி கும்பிடு போட்டு தாழவிழுந்து அதை நமஸ்கரிக்கிறார்கள். இன்னும் சிலர் ஊரும் பிராணிகளையும், பறக்கும் பறவைகளையும், கடல்வாழ் ஐந்துக்களையும் தெய்வமாக பாவித்து கைகளை ஏறெடுக்கிறார்கள். இன்னும் சிலர் வானத்தில் இருக்கிற சூரியன், சந்திரன் நட்சத்திரங்களைப் பார்த்து கண்களை மூடி சேவிக்கிறார்கள். ஆனால், அண்டசராசரங்கள் எல்லாவற்றையும் படைத்த ஆண்டவரை அவர்கள் தேடுவதில்லை. இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் (ரோமர்.1;25) என்று எழுதுகிறார்.

தேவனை அறியக் கூடிய அறிவு அவர்களுக்கு இருந்தும் அதைக் குறித்து இவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், தேவனுடைய மீட்பின் திட்டத்தை அசட்டை பண்ணுகிறார்கள், மேலும் பவுல் கூறும் போது "அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத் தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள் உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (ரோமர்.1;21) என்று எழுதுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவின் இடதுபக்கத்தில் வெள்ளாடுகளாக நிற்கப் போகிறார்கள். அவர்களுக்கு எப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பு கிடைக்கும் என்பதை பவுலே எழுதுகிறார்கள் கவனியுங்கள். "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்கு பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பு (ரோமர்.1;32) என்று கூறுகிறார். ஆகையால் தேவனை அறியாதவர்கள் உண்மையான தேவனை அறிந்து கொண்டு, இயேசு கிறிஸ்து தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்த கிறிஸ்துவின் சபையில் இரட்சிக்கப்பட்டு உட்பிரவேசிக்க வேண்டும். இல்லையென்றால் தேவனுடைய நீதியான நியாயத் தீர்ப்பு உங்கள் தலையின் மேல் காத்து இருக்கிறது.

### கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் (II.தெச.1;7)

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு எதற்கு வந்தார் என்று சிலர் தெரியாமல் குழம்பி தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் பல காப்பு நாடா போதகர்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் வியாதிகளை போக்கும் மருத்துவர் என்றும், உங்களுக்கு வீடு, வாகனங்களை கொடுக்கும் ஐசுவரியவான் என்றும்,

குடும்ப பிரச்சினைகளை போக்கும் பஞ்சாயத்து தலைவர் என்றும் போதித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் கிறிஸ்து எதற்கு வந்தார் என்று அநேகர் புரிந்து கொள்ள முடிவதில்லை.

ஆனால் யோவான் ஸ்நானகன் இயேசுகிறிஸ்துவை தம்முடைய சீஷர்களுக்கு காட்டி, "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான்.1;29) என்று அறிவித்தான். வேத வசனங்களும் மேலும் இவ்வார்த்தைக்கு வலுவூட்டுகின்றன. "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள் அவரிடத்தில் பாவமில்லை (I. யோவான்.3;5) என்று அப்போஸ்தலனாகிய யோவானைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் விளம்பி இருக்கிறார். எனவே இயேசு கிறிஸ்து மனிதனுடைய பாவங்களை மன்னித்து நித்திய ஜீவனை அளிப்பதற்காக வந்தார். அதனால் தான் அவர் தன்னையே சிலுவையில் ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்தார். அவருடைய பாடு அடக்கம் உயிர்த்தெழுதல் (I.கொரி.15;3,4) இவையே சுவிசேஷம் என்று பவுல் கூறுகிறார்.

இந்த சுவிசேஷத்திற்கு ஒருவன் கீழ்ப்படிய வேண்டும். அதாவது ஒருவன் இயேசு கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார் என்று விசுவாசித்து பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கே சொல்லப்பட்ட கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கு என்ன நேருமென்று பவுல் அடியார் தெசலோனிக்கேயாவிலிருக்கும் கிறிஸ்துவின் சபைகளுக்கு எழுதும் போது "தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும் (II.தெச.1;7,8) என்று எழுதுகிறார். எனவே தேனுடைய குமாரானாகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து தேவனுடைய வீடாகிய கிறிஸ்துவின் சபைக்குள் உட்பிரவேசியுங்கள். மாட்டோம் என்பீர்களாகில் பவுல் எச்சரிப்பதுபோல நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் மேல் தேவனுடைய நீதியான தீர்ப்பு உங்களுடைய சிரசின் மேல் இறங்குவதற்கு ஆயத்தமாக இருக்கிறது.

***தொடரும்...***

**பர்னபாஸ்.**
திருப்பூர்

# கர்த்தருடைய வேதம்

ஆதியில் தேவன் தந்த பரிசுத்தமான சாயலை மனிதன் இழந்து போனதால் மனிதன் தேவனுடைய ஐக்கியத்திலிருந்து பிரிந்தான். பிள்ளைகளைப் பிரிந்த தகப்பனைப் போல மறுபடியும் தேவன் அவர்களோடு ஐக்கியம் கொள்ள விரும்பினார். ஆனால் மனிதரின் பாவம் ஐக்கியத்தை தடை செய்தது. இதை சரி செய்யவே தேவன் தம்முடைய வார்த்தைகளை மனித சமுதாயத்திற்கு அளித்தார். அதுவே கர்த்தருடைய வேதம் அல்லது பரிசுத்த வேதாகமம் (ரோம 1:4) என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்களை சரி செய்யவும், அவர்கள் தேவனுடைய விருப்பங்களை அறியவும் தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் பழைய ஏற்பாட்டை ஏற்படுத்தினார். அது இன்றைக்கு நமக்கு நேரிடையான சட்டங்களாக பயன்படாவிட்டாலும், திருஷ்டாந்தங்களாக அதாவது மாதிரிகளாகவும், அதிலுள்ள சாட்சிகள் நமக்கு போதனையாகவும், பக்தி விருத்தியடையவும் ஏதுவாகிறது. மட்டுமல்ல அவை நமக்கு எச்சரிப்பாகவும் வைக்கப்பட்டுள்ளது. (ரோம 15 : 4, 1 கொரி 10 : 11)

இழந்து போன தேவ சாயலை மனிதனுக்கு மீட்டுத் தரவும் மறுபடியும் அவனை தேவனோடு ஐக்கியம் கொள்ளச் செய்யவும் கடைசியாக, குறித்த காலத்தில் தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார் (லூக் 19 : 10, எபி 1 : 1,2). பிதாவாகிய தேவன் ஆண்டவர் இயேசுவின் மூலம் உலகத்தின் அத்தனை ஜனங்களும் (இஸ்ரவேலர் மட்டுமல்ல) மனந்திரும்பி ரட்சிக்கப்படவே புதிய ஏற்பாடு என்ற புதிய உடன் படிக்கையை ஏற்படுத்தினார். இரண்டு ஏற்பாடுகள் சேர்ந்தே பரிசுத்த வேதாகமம் எனப்படுகிறது. பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய தேவனையும் அதாவது இயேசுக் கிறிஸ்துவையும் அறிந்து கொள்வதே நித்திய ஜீவன் அல்லது உண்மையான வாழ்க்கையாகும். அதற்கு காரணமான வேதாகமத்தின் சிறப்பை தாவீது தனது அனுபவத்திலிருந்து சொல்லிய சங்கீதம் 19ல் சில வசனங்களை உற்று பார்க்க தேவன் கிருபை செய்வாராக.

## கர்த்தருடைய வேதம் குறைவற்றது :

இவ்வுலகில் மனிதர் மேம்பட அநேக ஆலோசனைகள், மார்க்கங்கள் மற்றும் புத்தகங்களும் இருப்பினும் அவை மனிதனுக்கு நிறைவான திருப்தியை தரக்கூடியவை அல்ல. மருந்துகளே சில பின் விளைவுகளையும் ஏற்படுத்துவது போல் உலக ஆலோசனைகள்,

போதனைகள் யாவும் குறைகளும், அநேக சறுக்கல்களும் நிறைந்தவனாய் உள்ளன. மக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் மாத, வார, தினப் பத்திரிகைகள் யாவும் பொழுது போக்காக மாத்திரமல்லாமல் அவர்களுடைய நல்வழிக்கும் கேடுண்டாக்கி மனதைக் கெடுப்பவையாக உள்ளது. மன நிம்மதிக்காக மனிதன் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்ய தயாராக இருக்கிறான். ஆனால் கர்த்தருடைய வேதமோ சரியாகவும், இலவசமாகவும் அதைத் தருகிறது. (ஏசா 55 : 1-3, ரோம 3 : 23, 24) குறையொன்றும் இல்லாத நிறைவான கர்த்தருடைய வேதம் இலவசமாய் - நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களுக்கு ஜீவ அப்பமாக இயேசுவையும், ஜீவத் தண்ணீராகிய அவருடைய உபதேசத்தையும் தந்து பூரண திருப்தியைத் தருகிறது. இது ஒருக்காலும் பசியடையாத, தாகமடையாத திருப்தியாகும்.

**ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது** : ஒரு செடி எவ்வாறு தண்ணீர் இல்லாமல் வாடிப் போகுமோ அது போல மனிதனுடைய ஆத்துமா உலகக் கவலைகளினாலும், கடந்த கால பாவம், எதிர்கால பயம் மற்றும் நிகழ்கால சோகம், விரக்தி ஆகியவற்றால் வாடிப் போகிறது. அதைக் கர்த்தருடைய வேதமேயல்லாமல் உலகில் எப்படிப்பட்ட மருத்துவராலும் சரி செய்ய முடியாது. தேவனுடைய வார்த்தைக்கு மாத்திரமே உயிர்ப்பிக்கும் வல்லமையுடையது (எபி.4:12, 1 பேது 1 : 23) இவ்வுலகில் மனிதர் பொருளாசையினால் ஈர்க்கப்பட்டு தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள். தேவன் எதிர்பார்க்கும் தன்மை மனிதனிடம் காணப்படாததால் யாவரும் ஆத்துமாவில் மரித்துள்ளனர். அதை உயிர்ப்பிக்க கர்த்தருடைய வேதம் மிக அவசியமாகும். அதற்கு ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டியது அவசியம். இதை வேதமே நமக்கு எடுத்து காட்டுகிறது. எந்தச் சிறப்பான விஞ்ஞானியாலும் முடியாத இந்த செயலை தேவன் பைத்தியமாய் தோன்றுகிற சிலுவையின் உபதேசத்தினால் சாதித்துக் காட்டியுள்ளார். இதை பரிசுத்த வேதமே நமக்கு வலியுறுத்துகிறது.

**கர்த்தருடைய சாட்சிகள்** : வேதத்தை நாம் கருத்தாய் ஆராயும் போது தேவனை நம்பி இவ்வுலகில் விசுவாசத்தோடு வாழ்ந்த அநேக சாட்சிகளின் அதாவது பக்தர்களின் வாழ்க்கை நெறி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அவர்களில் ஆபிரகாம், யோபு, யோசேப்பு மோசே, தாவீது, தானியேல் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவை யாவும் இவ்வுலகில் நடந்த சம்பவமாக இருப்பதினால் சத்தியமாயிருக்கிறது. கற்பனை கதாபாத்திரங்கள் அல்ல. இதை நாம் வாசித்துப் பார்க்கும் போதே வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளலாம்.

இன்னுமாக கர்த்தருடைய சாட்சி பேதையை ஞானியாக்குகிறது. இவ்வுலகில் யாரும் பிறப்பிலேயே அறிவாளியாகிவிடுவதில்லை. நாம் கற்றுக் கொள்வதின் மூலமே ஞானத்தை பெறமுடியும். இருப்பினும் இவ்வுலக மூலமே ஞானத்தை பெற முடியும். இருப்பினும் இவ்வுலக ஞானம் தேவனைப் பற்றி அறிய உதவி செய்வதில்லை. ஆனால் ஒருவன் கர்த்தருடைய வேதத்திற்கு செவி கொடுத்து தேவனுக்கு பயப்படும் போது ஞானம் பெறலாம். உலகில் நன்றாக, அதிகமாக பேசுகிறவர்களை அறிவாளி என்றும் அவனிடம் வாய் கொடுத்து ஜெயிக்க முடியாது என்றும் கூறுவர். ஆனால் சாலொமோன் மவுனத்தின் சிறப்பை உணர்த்த "பேசாதிருந்தால் மூடனும் ஞானியென்றெண்ணப் படுவான் என்றார். தீமையை விட்டு விலகும் ஞானத்தை ஒருவன் கர்த்தருடைய வேதத்தின் மூலம் மாத்திரமே பெறமுடியும்.


**கர்த்தருடைய நியாயங்கள் செம்மையானது** : உலகச் சட்டங்கள் நமக்கிருப்பினும் அவை பல நேரங்களில் நிரபராதிகளை தண்டிக்கவும், குற்றவாளிகளை தப்பவிடவும் பயன்படுத்தப்படுகிறது. எனவே தான் சாலொமோன் ஞானி, "பூமியிலே நியாயஸ்தலங்களைக் கண்டேன், அங்கே அநீதி இருந்தது (பிர.3:16) என்று வருத்தப்படுகிறார். ஆனால் நம் தேவன் சிறுமையானவர்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் நீதியை கிடைக்கப் பண்ணுகிற தேவன் என்று நம்முடைய வேதத்தில் நாம் கண்டு ஆறுதலடைகிறோம். மனிதனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழிகளுண்டு அதின் முடிவோ மரணம் என வேதம் எச்சரிக்கிறது. உலக சட்டத்தின் மூலம் மனிதனை திருத்தி நல்லவனாக மாற்ற முடியாது. ஆனால் கர்த்தருடைய வேதத்திலுள்ள செம்மையான நியாயங்கள் ஒருவனை பரலோகம் செல்ல வழி நடத்துகிறது.

***(தொடரும்)***

**K. பாண்டியன்**

## நடப்புச் செய்திகள்


1. 5 மாநில சட்டமன்ற தேர்தல் : வேட்புமனு தாக்கல் ஆரம்பம்
2. இந்து பத்திரிக்கை ஆசிரியருக்கு, தமிழக சட்டசபை சிறை தண்டனை அளித்திருக்கிறது.
3. பேச்சு மற்றும் எழுத்துச் சுதந்திரம் தமிழகத்தில் நசுக்கப்படுவதாக தலைவர்கள் கருத்து.
4. இந்தியா தயாரித்த 12 அம்ச சமரச திட்டத்தை பாகிஸ்தான் கிடப்பில் போடுவதாக தெரிகிறது.
5. இலங்கையில் அதிபர் சந்திரிகா - பிரதமர் ரணில் கடும் மோதல்
6. 3 நாடுகள் கிரிக்கெட் போட்டி இந்தியா இறுதி போட்டிக்கு தகுதி பெறுமா?



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible***

***Correspondence Courses,***

***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs. 30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**

DESIGNED BY SAKURA CRODE © 2254804